**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, DINDIGUL**

| | | | | |
|---|---|---|---|---|
| Case No. | : | CC 77 / 2019 | | |
| Deposition of witness for | : | PW | : | 1 |
| | | LW | : | 1 |
| Name | : | ஆனந்தபாபு | | |
| Father's Name | : | | | |
| Village | : | | | |
| Taluk | : | | | |
| Caste | : | | | |
| Calling | : | | | |
| Religion | : | | | |
| Age | : | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.12.2022.

**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் தெற்கு ரயில்வே காலனியில் குடியிருந்து தென்னக ரயில்வேயில் தற்சமயம் ஆண்டிபட்டி செக்சனில் TM 4 ல் டிராக் மெயின்டனராக வேலை செய்து வருகிறேன். கடந்த 28.10.2017 ம் வருடம் சனிக்கிழமை மாலை 05.00 முதல்வ 06.30 மணிக்குள் LC 312km 437/100 -200 பணிபுரிந்து வந்த போது வண்டி எண் 56770 திண்டுக்கல்லிலிருந்து மதுரைக்கும் 567709 மதுரையிலிருந்து திண்டுக்கல் நோக்கி வருவதாக S.M போன் பண்ணி தகவல் சொன்னார்.

நான் கேட்டை மூடுவதற்கு முயற்சி செய்த போது கேட் பழுதாகி விட்டது. நான் உடனடியாக போன் மூலம் எங்களது அதிகாரிக்கு SSE, P.WAY திண்டுக்கல்லுக்கு தகவல் சொன்னேன். அவர்கள் உடனடியாக K,சுதாகர், பிளாஸ்மர் வந்து கேட்டை பழுதை நீக்கி கொண்டிருந்தார். 300 மீட்டர் இடைவெளியில் இரண்டு பக்கமும் வண்டி வந்து கொண்டிருந்ததால் கேட்டை இறக்கி அப்படியே லாக் செய்து சிக்னல் செய்து விட்டோம்.

அப்போது சிறுநாயக்கன்பட்டியிலிருந்து வந்த TN 57 B 9393 வெள்ளை கலர் டாடா சுமோ வாகனம் வந்தது. அப்போது வாகனத்தில் வந்த சுமார் 7 நபர்கள் கேட்டை திறக்க சொல்லி கேட்டார்கள். நான் வண்டி அருகே வந்து விட்டது என்றும்வண்டி கடந்து சென்ற பின்பு கேட்டை திறந்து விடுகிறேன் என்றும் இல்லை என்றால் விபத்து ஏற்படும் என்று அவர்களிடம் சொன்னேன்.

அப்போது டாடா சுமோ வாகனத்தில் வந்தவர்களில் நான்கு நபர்கள் அசிங்கமான வார்த்தைகளால் பேசி எனது சட்டையை பிடித்து எனது இடது தோள்பட்டையில் எங்களது கேட்டிலிருந்து சவுலை எடுத்து அடித்து விட்டார். உன்னை கொன்றால் கூட யாரும் கேள்வி கேட்க மாட்டார்கள் என்று கொலை மிரட்டல் செய்தார்கள். ஆஜர் எதிரிகள் அந்த எதிரிகள்தான்.

நடந்த சம்பவத்தை ஸ்டேசன் மாஸ்டர் மற்றும் எங்களது அதிகாரி SSE, P.WAY யிடம் தெரிவித்து என்னுடன் வேலை பார்த்த சுதாகர் மோகன் ஆகியோர்கள் உதவியுடன் இருசக்கர வாகனத்தில திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு மாற்று நபர் வந்தவுடன் சிகிச்சைக்கு சென்றேன். அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த போது போலிசார் வந்து விசாரணை செய்த போது நடந்த சம்பவத்துக்கு நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான்.

**( புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது )** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜரிலிருந்து குறுக்கு விசாரணை இல்லை என்றார்கள்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

(S/d.) N. Meenatchi, B.A.,B.L.,
Judicial Magistrate No:II
Dindigul

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

- - - - -

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, DINDIGUL**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 77/2019 |
| Deposition of witness for | : | PW: 2 |
| | | LW: 3 |
| Name | | டக்ளஸ் |
| Father's Name | : | ஜோசப் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.12.2022

**முதல் விசாரணை**

நான் சிறுநாயக்கன்பட்டியில் குடியிருந்து ஆதிசங்கரா மில்லில் வேலை செய்து வதுகிறேன். கடந்த 2017 வது வருடம் நத்தம் N.P.R.பாலி டெக்னிக்கில் படித்துக் கொண்டிருந்தேன் கடந்த 28.10.2017 ம் தேதி சாயங்காலம் 06.00 மணி அளவில் நான் கல்லூரி முடித்து சைக்கிளில் வரும் போது சிறுநாயக்கன்பட்டி காப்பிக்கடை ரயில்வேகேட் பூட்டியிருந்தது. நான் என்னவென்று கேட்ட போது கேட் கீப்பரை அடித்து விட்டதாகவும் தகவல் சொன்னார்கள். போலிசார் வந்து அங்கு படம் வரைந்தார்கள். அதில் என்னை சாட்சியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். ( **பார்வை மகஜர் அ.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது** ) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜரிலிருந்து குறுக்கு விசாரணை இல்லை என்றார்கள்.

Taken down by me in Open Court read over to the witness in the presence of the accused, interpreted to him/her in tamil and admitted him/her to be correct.

(S/d.) N. Meenatchi, B.A.,B.L.,
Judicial Magistrate No:II
Dindigul